பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D M K

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: ஆடி 2உ (18—7—67) செவ்வாய் ★ வெளியூர்: ஆடி 3உ (19—7—67) புதன் [இதழ்: 29

பதவியைத் துஷ்பிரயோகம் செய்தாரா மன்ருடியார்?

பதினைந்தாண்டுகளுக்குமுன் ஏற்பட்ட இழப்புக்கு அமைச்சரானபின் உதவித் தொகை

சொந்த மாட்டுப் பண்ணைக்கு அரசிடமிருந்து ரூ. 1,98,973 பெற்ருர்

சென்னை, ஜூலை 18—

"முன்னுள் கூட்டுறவு அமைச்சர் அவர்களின் கால் நடைப் பண்ணையில் 15 ஆண்டுகட்கு முன் ஏற்பட்ட இழப்புக்கு 1965—66-ம் ஆண்டுகளில், விதி முறைகளையொட்டியோ அல்லது திருத்தப்படாமலோ இழப்பு ஈட்டுத் தொகை வழங்கப்பட்டதா? 'ஆம்' எனில், வழங்கப்பட்ட தொகை எவ்வளவு? எந்த அடிப்படையில் வழங்கப்பட்டது?"

என்று, இன்று சட்டமன்றத்தில் திரு. டி. இராசரத்தினம் கேட்ட அவசரக் கேள்விக்கு. வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி பின்வருமாறு விடையளித்தார்:—

"1952—53-ம் ஆண்டு முதல் 1958—59-ம் ஆண்டு வரையிலான தீவனச் செலவுகளுக்காக மாநில அரசும், மத்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகமும் சேர்ந்து முன்னுள் அமைச்சர் திரு. மன்ருடியாரின் கால் நடைப் பண்ணைக்குக் கொடுத்த தொகை ரூ. 1,98,973; இந்தத் தொகையைக் கொடுப்பதற்கு 1965-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதில் சரிபாதி தொகையை மாநில அரசும், மற்றொரு பாதி தொகையை இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகமும் ஏற்கும். இந்தத் தொகையில் பாதி முன்னுள் அமைச்சர் மன்ருடியாருக்கும், இன்னொரு பாதி திருமதி பார்வதி அர்சுனனுக்கும் சேரும்."

டி. இராசரத்தினம்:—"இப்படிக் கொடுக்கப்பட்டது நியாயந்தானு?"

பதில்:—"1952 முதல் 1959வரை இந்தக் கோரிக்கை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது; திரு. மன்ருடியார் அமைச்சரானதும் அவர் கேட்டு வாங்கிக்கொண்டார்."

வி. கே. கோதண்டராமன்:—"ரூ. 500 பெறுமானமுள்ள மாடுகளை ரூ. 1,000, ரூ. 1,500 என்ற விலைக்கு விற்றுக் கொள்ளை இலாபமடிக்கும் தனியார் பண்ணைகளுக்கு இதேபோல் மானியம் அளிப்பதை நிறுத்தி, அரசே ஏன் இத்தகைய பண்ணைகளை நடத்தக்கூடாது?"

பதில்:—"தனிப் பட்டவர்களுக்குக் கொடுப்பதைவிட, அரசே நடத்துவது நல்லது என்றுதான், அரசும், பல கால்நடைப் பண்ணைகளை ஏற்படுத்தி வருகிறது."

கேள்வி:—"திரு. மன்ருடியார் தமது அமைச்சர் பதவியை துஷ்பிரயோகம் செய்து இத்தொகையைப் பெற்ருரா? அப்படியாளுல் இத்தொகையை அவரிடமிருந்து திரும்ப வசூலிக்கப்படுமா?"

பதில்:—"பதவியைத் துஷ்பிரயோகம் செய்தாரா இல்லையா என்பது தெரியாது; ஆனல், அந்தத் தொகையைப் பெற்ற போது அவர் அமைச்சராக இருந்தார் என்பது மட்டும் குறிப்பிடத்தக்கது."

கொளத்தூர் கோதண்டம்:—"இதேபோல் வேறு யாருக்காவது பணம் கொடுக்கப்பட்டிருக்கிறதா? அவருக்கு மட்டும்தான் கொடுக்கப்பட்டதா?"

பதில்:—"இதுபற்றிய விவரம் இல்லை."

சித்தன் (காங்.):—"இந்தப் பண்ணையில் இருந்த தரமான மாடுகளைப்போல் வேறு பண்ணைகளில் இல்லை என்பதால், இதற்கு இந்த உதவி அளிக்கப்பட்டது என்பது அரசுக்குத் தெரியுமா?"

பதில்:—"இது, உறுப்பினரின் கருத்தாக இருக்கலாம். இதற்கு மாறுபட்ட கருத்துக்களும் உண்டு என்பதை அவர் அறிய வேண்டும்."

கே. விநயகம் (காங்):—"அந்தச் சமயத்தில், அரசாங்கப் பண்ணையில் அந்தத் தரத்துக்கு மாடு இல்லை என்பதால், அப்போதிருந்த அரசு உதவி வழங்கியது என்பது தெரியுமா?"

பதில்:—"அப்போதிருந்த அரசுக்கு அது நியாயமாகப்பட்டதால், அந்த அரசு அந்தத் தொகையை வழங்கியது. அப்படி வழங்கியது நியாயம் என்று நான் சொல்லவில்லை."

சட்டமன்றத்தில் 'தமிழ் நாடு' முழக்கம்

சென்னை, ஜூன் 18—

'சென்னை ராஜ்யம்' என்று அரசியல் சட்டத்தில் இருப்பதை, 'தமிழ்நாடு' என மாற்ற வேண்டும் எனக் கோரும் தீர்மானம் இன்று சட்டமன்றத்தில் ஒருமனதாக நிறைவேறியது.

தீர்மானத்தை முன்மொழிந்த முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்கள், 'தமிழ்நாடு' என்று சொல்ல, மற்ற அத்தனை உறுப்பினர்களும் அதனை எதிரொலிக்க மூன்று முறை 'தமிழ்நாடு' என்ற முழக்கம் சட்டமன்றத்தில் முழங்கியதன்மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கறவை மாடுகள் வாங்க காங்கிரசார் பெற்ற கடன்

மாடும் வாங்கவில்லை — கடனையும் திருப்பிக்கொடுக்கவில்லை!

கழகத்தவரிடமிருந்து மட்டும் கெடுபிடி வசூல்

திருப்பெரும்புதூர் தொகுதியில் தேர்தல் கால நிகழ்ச்சி—சட்டமன்றத்தில் வெளியான தகவல்

சென்னை, ஜூலை 18—

"1965—66-ல் திருப்பெரும்புதூர் வட்டத்தில் தீவிர கால் நடை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கறவை மாடுகள் வாங்க 46 பேருக்குக் கடன் தொகை வழங்கப்பட்டது, அந்தக் கடன் தொகையைச் சிலர், மாடு வாங்காமல் சொந்தக் காரியத்துக்குப் பயன்படுத்திக் கொண்டனர்"

என்று, இன்று சட்டமன்றத்தில், கழக உறுப்பினர் திரு. டி. இராசரத்தினத்தின் அவசரக் கேள்விக்கு விடையளிக்கையில் வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி தெரிவித்தார்.

• மாடு வாங்கப் பணம் வாங்கி, திரும்பக் கொடுக்காதவர்களின் பட்டியலையும் அவர்கள் பெற்ற தொகையையும் அமைச்சர் வெளியிட்டார்:—

கணபதி நாயக்கர்	ரூ. 3,000
பட்டாபி நாயக்கர்	ரூ. 2,000
காதர்	ரூ. 5,000
மதனகோபால்	ரூ. 5,000
சக்கரபாணி	ரூ. 5,000

மேற்கண்டவர்களில் சக்கரபாணி என்பவரிடமிருந்து மட்டும் தொகை வட்டியுடன் வசூலிக்கப்பட்டுவிட்டதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

கேள்வி:—"அவர்கள்மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?"

பதில்:— "கடனை வசூலிக்கச் சென்ற மார்ச்சு மாதம் நோட்டீசு கொடுக்கப்பட்டது."

கேள்வி:—"மாடு வாங்குவதாகக் கூறிப் பணம் பெற்றுச்சொந்தத்துக்குப் பயன்படுத்திக் கொள்பவர்களிடமிருந்து, அதிகப்படியான பணம்வசூலிக்கப்படுமா?"

பதில்:—"கொடுத்த கடனையும் வட்டியையும் சேர்த்து வசூலித்தாலே போதும் என்று அரசு கருதுகிறது. இவர்கள் வேண்டுமென்றே பணத்தைத் திருப்பிக் கொடுக்காமல் இருப்பதாகவே தெரிகிறது. வசதியுள்ளவர்களுக்கே இந்தக் கடன் வழங்கப் பெற்றிருக்கிறது."

கொளத்தூர் கோதண்டம்:—"அமைச்சர் அறிவித்த பட்டியலில் பணம் திரும்ப வசூலிக்கப்பட்டவர் தி. மு. கழகத்தைச் சேர்ந்தவர்; பணம் கொடுக்காத மற்றவர்கள் அனைவரும் காங்கிரசுக்காரர்கள்; எனவே, தி. மு. கழகத்தைச் சேர்ந்தவர் மீது மட்டும் கெடுபிடி செய்து வசூலிக்கப்பட்டு மற்றவர்களை விட்டுவிட்டார்களா?"

பதில்:—"பணத்தைத் திருப்பிக் கொடுத்தவர் தி.மு. கழகத்தைச் சேர்ந்தவர் என்ற விவரம், கனம் உறுப்பினர் சொல்லியதிலிருந்துதான் எனக்குத் தெரிகிறது. கடனைத் திருப்பித் தராதவர்களில் முக்கியமானவர்களான மதனகோபால் என்பவர்

(4-ம் பக்கம் பார்க்க)

பாரதிதாசனுக்கு நினைவுச் சின்னம்

நிதி திரட்ட குழு அமைப்பு

புதுவை, ஜூலை 16—

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுக்கு அவர் பிறந்த ஊரான புதுவையிலேயே நினைவுச் சின்னம் ஒன்று அமைப்பதற்கு நிதி திரட்ட தமிழக சட்டமன்றத் தலைவர் சி. பா. ஆதித்தனுர் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டது.

இக்குழுவின் பொருளாளராக முரசொலி மாறனும், பொதுச் செயலாளராக பேராசிரியர் மா. கி. தசரதனும் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

5,833 இடங்கள் நிரப்பப்படவில்லை

கல்லூரிகளில் சேருவதற்கு இன்னும் வாய்ப்பு உள்ளது

தமிழகக் கல்லூரிகளின் இட நிலவரம் — கல்வியமைச்சர் அறிக்கை

சென்னை, ஜூலை 18—

சட்டமன்ற 82-வது விதியின்கீழ், கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன், இன்று சட்டமன்றத்தில் வெளியிட்ட அறிக்கையில், தமிழகத்தில் உள்ள கல்லூரிகளில் இன்னும் 5,833 இடங்கள் நிரப்பப்படாமல் காலியாக இருப்பதாக அறிவித்தார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:—

"தமிழகத்தில் மொத்தம் 113 கல்லூரிகள் உள்ளன; இவற்றில் அரசினர் கல்லூரிகள் மட்டும் 28; அதாவது ஆண்கள் கல்லூரி 21—மகளிர் கல்லூரி 7. தனியார் துறையில் உள்ள கல்லூரிகள் 85; இவற்றில் ஆண்கள் கல்லூரி 61—மகளிர் கல்லூரி 24.

'இந்தக் கல்லூரிகள் அனைத்திலுமாகப் புகுமுக வகுப்புகளில் 55,200 இடங்கள் உள்ளன; இவற்றில், தனியார் கல்லூரிகளில் 43,200 — அர

(5-ம் பத்தி பார்க்க)

கல்லூரியில் காலி இடம

(4-ம் பத்தித் தொடர்ச்சி)

சினர் கல்லூரிகள் 12,000 இடங்கள் இருக்கின்றன.

"இவற்றில், 15—7—67 வரை நிரப்பப்படாமல் 5,833 இடங்கள் காலியாக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

"இன்னும் ஒரு வாரம் அல்லது 10 நாட்களில் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்ப்பதற்கான தேர்வுகள் இறுதியாக முடிவுறும்.

"ஜூலை 25-ஆம் நாள் வரை எல்லாக் கல்லூரிகளிலும் சேர அனுமதியளிக்கப்பட்டுள்ளது. கல்லூரி முதல்வர்கட்கும், கல்லூரித் கல்வித்துறை நெறியாளர் சுற்றறிக்கை விடுத்துள்ளார். அந்த நாளுக்குப் பிறகு எங்கெங்கே எத்தனை இடங்கள் காலியாக இருக்கும் என்ற கணக்குத் தெரிந்துவிடும்.

நம்நாடு

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

திருவள்ளுவராண்டு 1998 ஆடி 2 (18—7—67) செவ்வாய்

உருக்காலையும் -- துறைமுகமும்

சேலம் உருக்காலை நிர்மாணித்தல்—தூத்துக்குடித் துறைமுகத்தை ஆழப்படுத்துதல் ஆகிய இரண்டும் தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கும், பொருளாதார மேம்பாட்டிற்கும் இன்றியமையாதனவாகும். இந்த இரண்டும் இன்று நேற்றுக் கிளம்பிய கோரிக்கைகள் அல்ல.

இவ்விரண்டு கோரிக்கைகளையும் எதிர்க்கக்கூடிய அரசியல் கட்சி எதுவுமில்லை; அனைத்து அரசியல் கட்சிகளும் இடையருது கோரிவந்திருக்கின்றன.

இவ்விரண்டு திட்டங்களில், சேலம் உருக்காலை நிர்மாணிப்பதற்கான நிலத்தை ஏற்கனவே இருந்த காங்கிரசு அரசாங்கம் ஏற்பாடு செய்துவிட்டிருக்கிறது. அங்கு கிடைக்கின்ற கனிப்பொருளைக் கொண்டு, எந்த ரக இரும்பை உற்பத்தி செய்ய முடியும் என்பதற்குரிய ஆராய்ச்சியும் செய்து முடிக்கப்பட்டுவிட்டது.

திட்டத்திற்கான முதலீட்டின் அளவு—அம்முதலீட்டில் அந்நியச் செலாவணியின் அளவு—தேவைப்படக்கூடிய அந்நியச் செலாவணியைத் தந்துதவக்கூடிய அந்நிய நாட்டின் ஒப்புதல்—துவக்க காலத்தில் உற்பத்தியின் அளவு—காலப் போக்கில் உற்பத்தியைப் பெருக்கக்கூடிய உச்ச அளவு—ஆகிய அனைத்தையும் வரையறுத்து, விரிவான திட்ட அறிக்கையும், அதற்குரிய பொறுப்பை ஏற்றுக்கொண்ட தொழில் நிறுவனத்தால் ஏற்கனவே தமிழக அரசாங்கத்திடம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

உருக்காலையில் உற்பத்தி செய்யப்படக்கூடிய இரும்பும் தனித்தன்மை வாய்ந்தது; உற்பத்திச் செலவும் குறைவு.

இத்தகைய சிறந்த உருக்காலைத் திட்டத்தைத் தனது சொந்தப் பொறுப்பில் நடத்தத் துணியாமல் மத்திய அரசு காலங்கடத்துவதைக் கண்ட தமிழ்நாட்டின் முன்னாள் காங்கிரசு ஆட்சி, சொந்தப் பொறுப்பில் துவக்குவதற்காகத் தனி நபர்களைப் போல 50 ரூபாயைக் கட்டணமாகச் செலுத்தி, அதற்குரிய அனுமதியைக் கொடுக்கும்படி இந்திய அரசாங்கத்திடம் கோரியிருந்தது. இவ்வாறு கோரப்பட்டது, பொதுத் தேர்தல் நடைபெறுவதற்குச் சில திங்களுக்கு முன்னரேயாகும்.

இக்கோரிக்கைபற்றி மூச்சுப் பேச்சு இல்லாமல் இருப்பதைக் கண்டு, தேர்தலுக்குப் பின்னர் அமைந்திருக்கக்கூடிய கழக ஆட்சி, உருக்காலையைத் துவக்க அனுமதி கோரப்பட்டிருப்பதை இந்திய அரசாங்கத்துக்கு மூன்று முறை எழுத்துமூலம் நினைவுபடுத்தியும் இருக்கிறது. இதற்கும் இந்திய அரசு அசைந்து கொடுக்கவில்லை.

தமிழக அரசாங்கம் கோரியுள்ளதற்கு இணங்க, 'இரும்பாலை துவக்க அனுமதி தரமுடியாது' என, இந்திய அரசாங்கம் மறுத்தாவது இருக்கவேண்டும்; இதையும் இன்றுவரை செய்யவில்லை.

இந்தச் சூழ்நிலையில், சேலம் உருக்காலையை எப்படியும் துவக்கியாகவேண்டும் என்ற முடிவுடன் இருக்கின்ற ஒரு மாநில அரசு என்ன செய்யவேண்டும்? சேலம் உருக்காலையைத் துவக்குவதில், தமிழக மக்கள் அனைவரும் ஒருமித்த கருத்துக்கொண்டிருக்கின்றனர் என்பதை இந்திய அரசுக்குத் தெள்ளத் தெளிய அறிவுறுத்தவேண்டிய கட்டாயத்துக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்ற தமிழக அரசு, தனது கடமையைச் செய்ய முன்வந்திருக்கிறது.

'தமிழக மக்களின் ஒருமித்த கருத்தை, இந்திய அரசாங்கத்துக்கு உணர்த்தவேண்டும்' என்ற முடிவுடன், ஜூலை 23-ஆம் நாளை, 'எழுச்சி' நாளாகக் கொண்டாடத் தீர்மானித்திருக்கிறது.

சேலம் உருக்காலையாவது, இந்திய அரசாங்கத்தின் அனுமதியை எப்போது பெறுவது என்பதை அறிந்துகொள்ள முடியாத இக்கட்டான நிலையில் இருந்துவருகிறது. தூத்துக்குடித் துறைமுகத்தை, பருவம் அனைத்திலும் ஏற்றுமதி—இறக்குமதி செய்யக்கூடிய தகுதிவாய்ந்த ஆழ்கடல் துறைமுகமாக ஆக்கவேண்டும் என்பது, கருத்தளவிலோ அல்லது ஏட்டுத் திட்டமாகவோ இருந்திடவில்லை. அத்தகைய ஆரம்பக் கட்டத்தையெல்லாம், அத்திட்டம் கடந்துவிட்டது.

தூத்துக்குடித் துறைமுகத்தை ஆழ்கடல் துறைமுகமாக்குவதற்காகத் தமிழக அரசாங்கம், ரூ. 50 இலட்சத்துக்குமேல் செலவழித்திருக்கிறது. இந்திய அரசாங்கம் இதுவரை ரூ. 5 கோடிக்கு மேல் செலவழித்திருக்கிறது. மேலும் ரூ. 16 கோடி செலவிட வேண்டும் என, இந்திய அரசாங்கத்தின் போக்குவரத்துத் துறை தீர்மானித்திருக்கிறது.

ஆனால், மேற்படி துறைமுகத்தை ஆழப்படுத்துவது பற்றிய போக்குவரத்துத் துறை அமைச்சின் முடிவை, இந்திய அரசின் நிதி அமைச்சர் முழு மூச்சாக எதிர்க்கத் தீர்மானித்திருக்கின்றார்.

போக்குவரத்துத் துறை அமைச்சு முடிவு செய்திருக்கின்ற 16 கோடி ரூபாயில் துறைமுகத்தை ஆழப்படுத்த முடியாது என்றும், மொத்தத்தில் 30 கோடி ரூபாய் தேவைப்படும் என்றும் நிதி அமைச்சர் குறிப்பிட்டுவிட்டு, அக்கூடுதலான தொகையைத் தருவதற்கில்லை எனவும் கூறுகிறார்.

இத்துடன், 'போக்குவரத்துத் துறை எதிர்பார்க்கின்றபடி, ஏற்றுமதியின் அளவு கூடப்போவது கிடையாது' என்ற காரணத்தையும் காட்டி, இந்திய அரசாங்கத்தின் நிதி அமைச்சர், துறைமுகத் திட்டத்துக்கு முட்டுக்கட்டை போட முன்வந்துள்ளார்.

இந்த விரும்பத்தகாத நிலையை மாற்றியாக வேண்டும். கொடுக்க விரும்பாத கரங்களைக் கொடுக்கச் செய்யவேண்டும். பொதுமக்களின் ஒருமித்த கருத்தைத் திரட்டித்தான், இந்திய அரசாங்கத்தை இந்த இரண்டு திட்டங்களுக்கும் இணங்கச் செய்யவேண்டும். இதற்காகத்தான் எழுச்சி நாள்—எழுச்சி நாளின் உள்ளடக்கம் இதுதான்.

—கா. க.

செயற்கை மழை ஆராய்ச்சியால் பயன் கிட்டவில்லை!

பத்து ஆண்டு முயற்சி குறித்து அமைச்சர் விளக்கம்

சென்னை, ஜூலை 15—

"தமிழகத்தில் செயற்கை மழை பெய்விக்கும் ஆராய்ச்சிக்காக 1958—59, 1959—60 ஆகிய இரண்டு ஆண்டுகளிலும் ரூ. 4870; 1960—61-ல் ரூ. 5760; 1961—62-ல் ரூ. 15,450; 1962—63-ல் ரூ. 12,330; 1963, 64, 65-ல் ரூ. 25,420; 1966—67-ல் ரூ. 76,530 செலவிடப்பட்டிருக்கிறது"

என்று சட்டமன்றத்தில், வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி தெரிவித்தார்.

இந்த ஆராய்ச்சியின் மூலம் செயற்கை முறையால் மழை தருவிக்க முடியும் என்று ஐயந்திரிபுக்கு இடமின்றி உறுதி செய்ய இயலவில்லை என்றும், 1958-ல் குந்தாவிலும், 1961-ல் திருச்சியிலும் பரிசீலிக்கப்பட்டதில் பயனளிக்கத் தக்க விதத்தில் இல்லை என்றும், 'உண்மையான மழைதானா அல்லது சினிமா மழையா' என்று சொல்லும்படியாக இருந்தது என்றும், இத்திட்டத்தைத் தொடர்ந்து ஆராய மத்திய அரசுதான் விரும்புகிறது என்றும் அமைச்சர் மேலும் கூறினார்.

தஞ்சை மாவட்டத்தில் விவசாயிகளுக்குக் கடன் உதவி

தஞ்சை, ஜூலை 16—

தஞ்சை மாவட்டத்தில் விவசாயிகட்கு வழங்குவதற்கென, கிடங்குகளில் சேகரித்து வைக்கப்பட்டிருந்த 6,000 டன் ஏ.டி.டி. 27 வகை விதை நெல்லில், இதுவரை 1,000 டன் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

89,000 டன் நைட்ரஜன் உர உப்புக்கள் ஒதுக்கப்பட்டுள்ளதில் 50,000 டன் சேகரிக்கப்பட்டு, விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டுவருகிறது.

சூபர் பாஸ்பேட் உர உப்பு வழங்கப்படும் நிலைமையும் நல்ல நிலையில் உள்ளது.

தஞ்சை, கும்பகோணம் கூட்டுறவு பாங்கிகள் விவசாயிகளுக்கு ரூ. 80 இலட்சம்வரை கடனுதவி அளித்துள்ளன.

மொத்தம் ரூ. 5 கோடி அளவு கடன் அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

சென்ற ஆண்டு ஏக்கருக்கு ரூ. 200 கடனுதவி அளிக்கப்பட்டது. இவ்வாண்டு ஏக்கருக்கு ரூ. 250 வீதம் கடனுதவி அளிக்கப்பட்டிருக்கிறது.

ஆசிரியர் தொகுதி

தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு வாக்குரிமை

சென்னை, ஜூலை 15—

"சட்டமன்ற மேலவையில் ஆசிரியர் தொகுதிக்குப் பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்கத் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கும் வாக்குரிமை அளிக்கும் வகையில் மத்திய அரசிற்குப் பரிந்துரை செய்யும் யோசனை பரிசீலக்கப்படுகிறது"

என்று சட்டமன்றத்தில் முதலமைச்சர் அண்ணா அவர்கள், ஓர் கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்கள்.

கறுப்புப் பணத்தினால் ஏற்படும் விளைவுகளைத் தடுக்கத் திட்டம்

நிபுணர்கள் குழு நியமனம்

புதுடில்லி, ஜூலை 15—

கறுப்புப் பணத்தின் காரணமாக நாட்டின் பொருளாதார நிலைமையில் ஏற்படுகிற விளைவுகளைத் தடுக்க வழிமுறைகள் குறித்து ஆராய நிபுணர்கள் குழு ஒன்றை அமைக்கும் யோசனை, மத்திய அரசின் பரிசீலனையில் இருந்துவருகிறது.

எதிர்க்கட்சியினரைப் புறக்கணிக்கும் நிலை முந்திய அரசில்தான் இருந்தது

கல்லூரித் தேர்வுக் குழுவில் காங்கிரசாருக்கும் இடமளித்திருக்கிறோம்

வினாயகம் கேள்விக்கு அமைச்சர் நெடுஞ்செழியன் அளித்த பதில்

சென்னை, ஜூலை 14—

அரசினர் கலைக் கல்லூரிகளிலும் தொழிற் கல்லூரிகளிலும் சேருவதற்கான மாணவர்களைத் தேர்ந்தெடுக்க அரசு நியமித்துள்ள குழுக்கள் பற்றிய கேள்விகட்கு கல்வி—தொழிலமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் இன்று சட்டமன்றத்தில் பதிலளித்தார்; அப்போது, காங்கிரசுக் கட்சி உறுப்பினர் திரு. கே. வினாயகம் எழுந்து, இந்தக் குழுக்களை அமைப்பதில் அரசியல் கண்ணோட்டத்துடன் அரசு நடந்துகொண்டிருப்பதாகவும், ஒரு குறிப்பிட்ட கட்சிக்கே இடமளித்திருப்பதாகவும் குறிப்பிட்டு, 'எதிர்க் கட்சி புறக்கணிக்கப்பட்டது ஏன்?' என்று வினவினார்; அதற்கு அமைச்சர் பின்வருமாறு பதிலளித்தார்:—

எதிர்க் கட்சியைப் புறக்கணிக்கும் நிலை முந்திய அரசில்தான் இருந்தது; இந்த அரசில் கிடையாது.

"சென்ற ஆண்டு கல்லூரித் தேர்வுக் குழுவில் எதிர்க் கட்சியினரான எங்களில் ஒருவர்கூட சேர்த்துக்கொள்ளப்படவில்லை. இந்த ஆண்டு நாங்கள் அப்படிச் செய்யவில்லை; காங்கிரசுக் கட்சியினரும் உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கின்றனர்.

"உதாரணமாக எடுத்துக்காட்ட வேண்டுமானால், எதிர்க் கட்சித் துணைத் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள்கூட கன்னியாகுமரி மாவட்டத்தில் கல்லூரித் தேர்வுக்குழு உறுப்பினராக உள்ளார்.

"ஒரு கட்சிக்கு மட்டுமன்றி பரவலாக எல்லாக் கட்சியினருக்கும் இடமளித்திருக்கிறோம்.

"இந்த ஐந்தாண்டுக் காலத்தில், ஆங்காங்கும் அவ்வப்போதும் இருக்கிற நிலையையொட்டி எல்லாக் கட்சியினருக்கும் இடமளிக்கவேண்டுமென்றே கருதியிருக்கிறோம்."

அம்பர் ராட்டையில் நூற்றோர் வேறு வேலைக்குப் போய்விட்டனர்

அமைச்சர் தகவல்

சென்னை, ஜூலை 15—

"மாயூரத்தில் அம்பர் சர்க்கா ராட்டை சரிவரப் பயன்படுத்தப்படாமல் தேங்கிக் கிடப்பதால் அரசுக்கு இழப்பு எதுவும் ஏற்படவில்லை; அந்த ராட்டைகளில் நூற்பதனால் கிடைக்கும் இலாபத்தைவிட அதிக வருமானம் கிடைக்கும் வேளாண்மைத் தொழிலுக்கு அனைவரும் போய்விட்டனர்; போகும்போது ராட்டைகளை ஒப்படைத்துவிட்டுப் போய்விட்டார்கள்; அந்த ராட்டைகளுக்கான விலையை அரசு முன்பே அவர்களிடமிருந்து வசூலித்துவிட்டதால், இனி அவர்கள் விருப்பமறிந்துதான் அவற்றை என்ன செய்யலாம் என்பது பற்றி முடிவு செய்யவேண்டும்"

என்று சட்டமன்றத்தில், திரு. கிட்டப்பா கேள்வியைத் தொடர்ந்து கேட்கப்பட்ட துணைக் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் முத்துசாமி கூறினார்.

போலீசு சர்க்கிள் இன்ஸ்பெக்டர்கள்

தமிழகத்தில் 361 பேர்

சென்னை, ஜூலை 15—

"தமிழகத்தில் மொத்தம் 361 போலீசு சர்க்கிள் இன்ஸ்பெக்டர்கள் இருக்கின்றனர்; அவர்களில் 144பேருக்கு வீடு கொடுக்கப்பட்டிருக்கிறது; எஞ்சியுள்ள 217 பேர்களுக்கு வீட்டு வாடகைப்படி கொடுக்கப்படுகிறது"

என்று சட்டமன்றத்தில், முதலமைச்சர் அண்ணா தெரிவித்தார்.

கைதிகளுக்குக் கைவிலங்கு -- கால் விலங்கு

இக்கொடுமை இனி நீடிக்காது

ஜெயப்பூர், ஜூலை 15—

சிறைச் சீர்திருத்தக் குழுவின் சிபாரிசையடுத்து இராஜஸ்தான் சிறைகளில் கசையடித் தண்டனை ஒழிக்கப்பட்டது.

சிறைக்குள் கைதிகளுக்குக் கால்விலங்கும், கைவிலங்கும் மாட்டுகிற வழக்கமும் ஒழிந்தது.

தற்காலத்திற்குப் பொருத்தமான சிறைச் சீர்திருத்தங்களைக் கூறுவதற்காக அரசு அக்குழுவை அமைத்தது.

நிவாரண நிதி திரட்ட கலை விழா

அமைச்சர் தகவல்

சென்னை, ஜூலை 16—

சென்னை நகரில் தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமளிக்க, சென்னை நகரில், திரைப்படக் கலைஞர்களின் விழா ஒன்று நடைபெறுமென அமைச்சர் சத்தியவாணிமுத்து கூறினார்.

அண்மையில் அமைச்சர் சத்தியவாணி முத்து அவர்கள், கவர்னர் மாளிகையில் திருமதி உஜ்ஜல் சிங், கிளப்வாலா அம்மையார், இயக்குநர் சுப்பிரமணியம், மற்றும் முக்கியமானவர்களைச் சந்தித்து நிவாரண நிதி குறித்து விவாதித்தார்.

ஆகஸ்டு 6-ம் நாளன்று சென்னை நகரில் திரைப்படக் கலைஞர்களைக் கொண்டு பெருவிழா ஒன்று நடத்துவதென்றும், விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதன் மூலமும் நிதி திரட்டுவதென்றும், இந்நிகழ்ச்சிகளில் கிடைக்கும் நிதியில் பாதியை பீகாருக்கும், பாதியைத் தமிழகத்திற்கும் அளிப்பதென குழு முடிவெடுத்துள்ளது என்றும் அமைச்சர் சத்தியவாணிமுத்து தெரிவித்தார்.

198 அரிசி மூட்டைகள் கைப்பற்றப்பட்டன

திருச்சி, ஜூலை 14—

137 மூட்டை அரிசி—2 மூட்டை சர்க்கரை—ஒரு மூட்டை கோதுமை ஆகியவை 11இரட்டை மாட்டு வண்டிகளில் கரூர்—திண்டுக்கல் சாலையில் கொண்டு செல்லப்படும்போது, கடந்த புதனன்று காவல்துறை எச்சரிக்கைக் குழுவினரால் கைப்பற்றப்பட்டன.

சென்ற வெள்ளிக்கிழமை திருச்சி—ஈரோடு புகைவண்டியில் சனப்பிரட்டி நிலையத்தில் சுமார் 25 மூட்டை அரிசி கைப்பற்றப்பட்டது.

ஞாயிற்றுக்கிழமை தங்கம்பட்டி இரயில்நிலையத்தில் 27 மூட்டை அரிசி கைப்பற்றப்பட்டது.

கரூர் இரயில்நிலையத்தில் திங்களன்றும், செவ்வாயன்றும்சோதனையிட்டதில் 9 மூட்டை அரிசி கைப்பற்றப்பட்டது.

ஊருக்கு உழைத்திடும் உணர்வுடன் பணிபுரியவேண்டும்

மக்களாட்சி மாண்பை மதிக்காதவர்களால் சீர்கேடுகள் மலிகின்றன

கூறப்படும் குறைபாடுகளைக் களைய தொடர்புடையவர்களைக் கூட்டி ஆராய்வோம்

சட்டமன்றத்தில் அமைச்சர் முத்துசாமி விளக்கம்

தமிழகச் சட்டமன்றததில், கதர்—சமுதாய நல வளர்ச்சித் திட்டம்—பொதுப் பணி வளர்ச்சித் திட்டம் ஆகிய துறைகளின் மானியக் கோரிக்கைகள்மீது 13–7–67 அன்று நடைபெற்ற விவாதத்துக்குப் பதிலளிக்கும்வகையில், உள்ளாட்சித்துறை அமைச்சர் மாண்புமிகு மா. முத்துசாமி அவர்கள் ஆற்றிய உரையின் முழு விவரம் (நேற்றைய தொடர்ச்சி) இங்கு தரப்படுகிறது :—

சனநாயக உணர்வுகளை மதிக்காததன் எதிரொலி

உள்ளாட்சி மன்றங்கள், கொள்கை வகுக்கும் மன்றங்கள் அல்ல; ஊராட்சி ஒன்றியம் முடிவு செய்கின்ற காரியங்களை அவை செயல்படுத்துகின்றன.

இந்த மன்றங்களின் தலைமையை ஏற்றுக்கொள்கின்றவர்கள் எந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், ஊராட்சி—உள்ளாட்சி மன்றங்களில் கொள்கை மோதுதல் இல்லாமல், 'பொதுமக்களுக்குச் சேவை செய்யவேண்டும்' என்ற உணர்ச்சியுடன் பணியாற்றக் கூடியவர்களாக இருக்கவேண்டும்.

இப்படிப்பட்ட நிலைமைக்குப் படிப்படியாக அதிகாரங்களைக் குறைத்துக்கொண்டு, ஆக்கபூர்வமான செயல்களில் ஈடுபடவேண்டுமென்ற எண்ணம், பலருக்கு இன்னும் ஏற்படவில்லை.

சனநாயக உணர்வுகளை நாம் சரியாக மதிக்காத காரணத்தால்தான், 'ஊராட்சி ஒன்றியங்கள் நல்ல முறையில் செயல்படவில்லை' என்ற பரவலான எண்ணத்தை ஏற்படுத்திவிட்டது.

இன்று நிலைமை வேறு!

ஊராட்சி மன்றங்கள் ஏராளமான பணத்தைச் செலவு செய்தாலும்கூட, உருப்படியான காரியங்களைச் செய்யவில்லையென்று புகார் சொல்லப்பட்டிருக்கிறது.

எந்த அளவுக்கு அவை செயல்பட்டு வருகின்றன என்றால், பொதுமக்களிடத்திலே நெருங்கிய தொடர்பு வைத்துக்கொண்டு காரியங்களைச் செய்கின்ற மன்றங்களாக விளங்குகின்றன. சுமார் பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னாலே ஒரு கிராமப்புற விவசாயி, கலெக்டர்—தாசில்தார் ஆகியோரைப் பார்த்துத்தான் தன்னுடைய விவகாரங்களைத் தெரிந்துகொள்ள வேண்டிய நிலைமை இருந்தது. கலெக்டரைப் பார்ப்பது என்பது எவ்வளவு சிரமமான காரியம் என்பதை நாம் தெரிந்து வைத்திருக்கிறோம். ஆனால் இன்று, 'எந்த அதிகாரியிடத்தில் போனால், எந்தக் காரியம் நடைபெறும்' என்பதை விவசாயிகள் தெரிந்து வைத்திருக்கிறார்கள்.

இந்த ஊராட்சி ஒன்றியம்—ஊராட்சி மன்றங்களின் நல்ல விளைவுதான் கிராமப்புற மக்களும் தங்கள் தேவைகளை அவ்வப்போது உணர்ந்து, அதைத் தேடிக்கொள்ளும் நிலையில் இருக்கிறார்கள்.

வளமுடைய சமுதாயம் உருவாக இயலும்

ஆரம்பக் கல்வியைப் பொறுத்தவரையில் ஒரு பெரிய மறுமலர்ச்சியை ஏற்படுத்திக் காட்டியிருக்கிறோம்.

"300 பேர் இருக்கக்கூடிய ஊர்களில் எல்லாம் பள்ளிக்கூடம் அமைக்கப்படவில்லை; ஒரு மைல் தூரம் போனால்தான் பள்ளி இருக்கிறது" என்று சில உறுப்பினர்கள் சொன்னார்கள்.

இந்த உள்ளாட்சி அமைப்பு முறையினால், ஏறத்தாழ 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட பள்ளிக் கட்டிடங்களை நாம் அமைத்துக் கொள்ள இருக்கிறோம்.

18 ஆயிரம் தொடக்கப் பள்ளிகள் இருக்கின்றன; 4-ஆயிரம் உயர்தரத் தொடக்கப்பள்ளிகள் இருக்கின்றன; இதல்லாமல், நகராட்சி மன்றங்கள் நடத்துகின்ற பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன.

'சமுதாயச் சீர்திருத்தம்' என்பதில் மேலெழுந்தவாரியான அடிப்படையின் மையமாக விளங்குகின்ற ஆரம்பக் கல்வியை வளர்ப்பது நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

வருங்காலம், நிச்சயமாக வளமுடைய சமுதாயமாக வாழ்ந்து பெருமைப்படுத்த முடியும். கல்விக்காக நாம் பெருந் தொகையைச் செலவழித்து வருகின்றோம்.

ஊராட்சி ஒன்றியங்கள் அரசியல் பலிபீடமல்ல!

குடிநீருக்காகக் கிணறுகள் வெட்டப்பட்டு, சுகாதார வசதிகள் நல்லமுறையில் செயல்பட்டு வருகின்றன.

இப்படிச் செய்தும்கூட, பொதுமக்களுக்கு ஒரு மனநிறைவு ஏற்படவில்லையென்று சொன்னால் ஆங்காங்கு ஏற்படுகின்ற சில சில தவறுகள்தான் இதற்குக் காரணம் என்பதை மனப்பூர்வமாக ஒத்துக்கொள்ளவேண்டும்.

அரசாங்கப் பணிபுரிபவர்கள், 'அரசாங்கத்திற்கும் — பொதுமக்களுக்கும் இடையிலே இருக்கின்ற நல்லெண்ணத் தூதுவர்கள்' என்ற மனப்பக்குவத்தைப் பெறவேண்டும்.

அரசாங்கம் என்பது அவர்களுடைய சொந்த விருப்பு வெறுப்புகளுக்கும், கட்சி மாச்சரியங்களுக்கும், ரசாபாசங்களுக்கும் உடன்பட்டது என்ற நிலை இருக்கக்கூடாது.

நாம் நிறையச் செலவு செய்து, பொதுமக்கள் நன்மைபெற வேண்டுமென விரும்புகிறோம்.

பணத்தையெல்லாம் செலவு செய்கின்ற உரிமை ஆணையாளரிடத்தில இருக்கிறது. ஆண்டொன்றுக்கு ரூ. 30 இலட்சம் வரை ரூபாயைச் செலவழிக்கின்ற உரிமை ஆணையாளரிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

பொதுமக்களின் இடையேயும்—அரசாங்கத்தின் இடையிலேயும் ஒரு நல்ல நிலைமையை உருவாக்குவதற்கு உறுப்பினர்களும், தலைவர்களும் பாடுபடவேண்டும்.

உறுப்பினர்களும், தலைவர்களும் சரியான பாதையில் சென்றால்தான் நல்ல வழி கிடைக்கும்.

உறுப்பினர்களும், தலைவர்களும் காய்தல்-உவத்தலன்றி, நடுநிலையிலிருந்து செய்யும் உணர்வு ஏற்பட்டிருக்குமானால், இது போன்ற ஊராட்சி ஒன்றியங்களின் பணி அலட்சியப்படுத்தப்படாமல் நல்லமுறையில் செயல்படுத்தப்படும்.

ஒரு சில இடங்களில் இந்த ஊராட்சி ஒன்றியங்கள் அரசியல் நோக்கத்திற்காக அதிகமாகப் பயன்பட்டன; அரசியல் பலிபீடமாக ஆக்கப்பட்டன; அதனுடைய வெட்டுக்காய்களாக ஒரு சில அதிகாரிகள் ஆக்கப்பட்டனர்!

நேற்று பேசிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 'உலகம் தோன்றிய நாளிலிருந்தே இந்த உள்ளாட்சி மன்றம் நமக்குக் கிடைத்திருக்கிறது' என்றார்.

சோழர் காலத்திலிருந்துதான்—அதற்கு முந்திய கால வரலாறு நமக்குக் குடைக்கவில்லை—இந்த ஊராட்சி மன்றங்கள்--ஊராட்சி ஒன்றியங்கள் இருந்திருக்க வேண்டும்.

அந்தப் பழைய அமைப்பு, சோழர்களால் உருவாக்கப்பட்டு நல்ல முறையாக செயல்பட்டுவந்திருந்தன. இம்மாதிரியான நிலையான அமைப்பை மக்கள் மனமகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ளத்தக்கவிதத்தில் நாம் உருவாக்கவேண்டும்.

மக்களிடத்தில் ஏன் மனநிறைவு இல்லை?

தமிழகத்தில் படிப்படியாக வளர்ச்சித் திட்டங்கள் தீவிரமாக உருவாகிக்கொண்டு வருகின்றன.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு, மக்களுடைய குறைகளையெல்லாம் போக்க வேண்டுமென்ற பெருவிருப்பத்தினால்தான், நான் தமிழகத்தின் பெரும் பகுதியைச் சுற்றிப் பார்த்தேன்.

எவ்வளவோ காரியங்கள் செய்யப்பட்டிருந்தாலும் மக்களிடத்திலே ஏதோ மனநிறைவு இல்லை.

அதிகாரிகள் எல்லாம் மக்களிடத்திலே ஏதோ நாலு வார்த்தை இனிமையாகப் பேசுகின்ற தன்மையில்லாத நிலைமை இருந்து வருகிறது; நல்ல காரியங்களைச் செய்கின்ற தன்மை இல்லாமல் இருக்கிறது.

ஒதுக்கிய தொகையில் ஒரு காசும் குறையாது!

நண்பர் கரியமாணிக்க அம்பலம் பேசும்போது, 'பஞ்சாயத்துயூனியனுக்குக் கொடுக்கப்பட்டுவந்த பணம் குறைந்துவிட்டது' என்றார்; தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஆண்டுக்கு ஆண்டு பஞ்சாயத்து யூனியனுக்குக் கொடுக்கப்படுகின்ற தொகை அதிகமாகிக்கொண்டுதான் வருகின்றது. ஆனால் மத்திய அரசாங்கத்திலிருந்து நமக்கு வருகிற தொகைதான் ஆண்டுக்கு ஆண்டு குறைந்து கொண்டே வருகிறது.

மத்திய அரசாங்கம் குறைவாகத் தொகை ஒதுக்கியும், மாநில அரசாங்கம் கூடுதலாகஊராட்சி ஒன்றியங்களுக்கு நிதி உதவி அளித்து வருகிறது.

கடந்த 1965-66-ம் ஆண்டில், தமிழகத்தில் ஊராட்சி மன்றங்களுக்கும், ஒன்றியங்களுக்கும் அளிக்கப்பட்ட தொகை ரூ. 230.57 இலட்சம்; 1966—67-ல் ரூ. 271 இலட்சம்; 1967—68-ல் ரூ. 273 இலட்சம். இப்படியாக தொகை அதிக அளவில் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

சென்ற ஆண்டில் கிராம வேலைத் திட்டத்தின்கீழ் விவசாயத் துறைக்கு ரூ. 141. 59 இலட்சம் ஒதுக்கப்பட்டிருந்தது; இந்த ஆண்டு ரூ. 150.40 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

மேலும், 'லோகல் லோன்ஸ் கிராண்ட்'—'வில்லேஜ் அவுஸ் டாக்ஸ்'—'மாட்சிங் கிராண்ட்' என்ற அடிப்படையில் முதலில் ரூ. 85 இலட்சம் ஒதுக்கப்பட்டிருந்தது; தற்போது ரூ. 90 இலட்சமாக அது உயர்த்தப்பட்டிருக்கிறது.

இப்படி நிதி கொடுக்கிற தன்மையிலேதான் தமிழக அரசு இருந்து வருகிறது. ஒரு சில இடங்களில் குறைகள் ஏற்பட்டிருக்கலாம். ஒரு சில இடங்களில் கொடுக்க வேண்டிய தொகை குறைந்து போனதாகத் தெரியும்.

இடைக்காலத்திற்கான நிதி நிலை அறிக்கை கொடுக்கப்பட்டது. ஒவ்வொரு இடத்திற்கும் இவ்வளவு என்று தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஒரு சில இடங்களில் அதிகாரிகள் அந்த உத்தரவையே ஆண்டு முழுவதற்கும் என்று கணக்கொடுத்துக்கொண்டு இருப்பார்கள் என்று கருதுகிறேன். சென்ற ஆண்டு கொடுத்த தொகையிலிருந்து ஒரு காசுகூடக் குறையாது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

தவறான முறைக்கு இனி இடமிருக்காது!

'ஜீப்' என்பது, நம்முடைய உபயோகத்திற்கு நமக்கு அடிமையாக இருந்த நிலைமை மாறி, அனைவருக்கும் ஜீப்புக்கு அடிமையாகிவிட்ட நிலையைப் பார்க்கிறோம்!

ஜீப்பினால் ஏற்படுகிற பலன்களைவிட அதனால் ஏற்படக்கூடிய வெறுக்கத்தக்க—விரோத சூழ்நிலை அதிகமாகி இருக்கிறது! அங்குள்ள 'சேர்மன்' எடுத்துக்கொண்டு போய்விடுகிறார்; அங்குள்ள 'காஷியர்' எடுத்துக்கொண்டு போய்விடுகிறார் என்றால் நம்மால் புரிந்துகொள்ள முடியும்.

'அவர்கள் உபயோகிக்கிறார்களே; நம்மால் உபயோகிக்க முடியவில்லையே' என்கிற மாச்சர்யம்தான் அதிகமாக இருக்கிறது; அதுவும் 'வருவாய்த்துறை அதிகாரிகள்தான் அதிகம் உபயோகிக்கிறார்கள்; பிறருக்குப் பயன்படவிடுவதில்லை' என்கிற குறை பரவலாக இருக்கிறது.

நிச்சயமாக இந்தக் குறைகளைப் போக்கமுடியும். மற்றவர்களுக்குப் பயன்படுமாறு செய்ய வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அவை சரியான முறையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றனவா என்று பார்த்துக்கொள்ளவும் முடியும். இல்லை என்றால், திருப்பி எடுத்துக்கொள்ளவது பற்றியும் அப்போது யோசிக்கப்படும்.

தேவையான மாற்றம் செய்யத் தயங்கோம்!

மாவட்ட வளர்ச்சி மன்றங்களைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். அதுபற்றி மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்; வெறும் நடைமுறை மரபாக இல்லாமல் ஆக்கபூர்வமாக ஒரு நாள் அல்லது இரண்டு நாள்கூடி—எல்லா அதிகாரிகளும் கலந்துகொண்டு—ஒரு விரிவான திட்டத்தைத் தீட்டவேண்டுமென்ற கருத்தை தெரிவித்தார்கள். மேலும் அது பற்றிய விளக்கத்தை விவரிக்கத் தேவையில்லை என்று கருதி விடுகிறேன்.

ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றிப்புத் தலைவர்கள் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற முறையைப் பற்றிச் சொன்னார்கள். அது ஒரு கொள்கை பற்றியது; தனிப்பட்ட முறையில் சொல்லவில்லை.

இன்றைக்கு ஆளும் கட்சியில் உள்ள நாங்கள் கடந்த காலத்தில் அந்தக் கருத்தையே வலியுறுத்தி வந்திருக்கிறோம்.

ஆகவே, ஊராட்சி—ஊராட்சி ஒன்றிப்புக்களுடனும், தொடர்புடைய மற்றவர்களுடன் கலந்துகொண்டும் தேவையான மாற்றங்களைச் செய்ய நிச்சயமாக இந்த அரசு தயங்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விதிமுறைகளை மாற்றி அமைப்பது அவசியம்?

நகர சீரமைப்புத் திட்டம் போன்றவைகளை நகராட்சி மன்றத் தலைவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்களுக்கு இருக்கக்கூடிய சங்கடங்களை உணருகிறேன்.

நாம் விதிமுறைகளை வைத்துக்கொண்டுதான் நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. 'விதிகளே வேண்டாம்' என்று சொல்ல முடியாது. அவசியமான இடங்களில் விதிவிலக்கு அளிப்பதைப் பற்றி யோசிக்கலாம்.

'300 பேர்கள் இருக்கக்கூடிய இடங்களில் எல்லாம் ஒரு ஆரம்பப் பள்ளி ஏற்படுத்த வேண்டும்' என்று குறிப்பிட்டார்கள். நாம் இன்றைக்கு நம்மிடம் இருக்கும் பொருளாதார நிலையை அடிப்படையாக வைத்துக் கொண்டுதான் நடைமுறைக்கு ஏற்ற விதிமுறைகளைச் செய்கிறோம். காலத்திற்கேற்ப விதிமுறைகளை மாற்றி அமைக்க வேண்டுமே அல்லாது, 'விதிமுறையே தவறு' என்று வாதிடக்கூடாது.

சிக்கல்கள் நீங்கிவிடும்

ஆரம்பப் பள்ளிகளை ஏற்படுத்துவதில் உள்ள காலதாமதங்களை எடுத்துக் காட்டினார்கள். அப்படிப்பட்ட குறையை நீக்க வேண்டும் என்பதற்காகத்தான் கல்வித் துறையில் ஈடுபட்டுள்ள ஒரு அதிகாரியை உள்ளாட்சித் துறையில் போட்டிருக்கிறோம். அவர், பொதுமக்களுடைய கோரிக்கைகளைப் பரிசீலித்து, ஆரம்பப் பள்ளிகளைத் தேவைப்படுகின்ற இடங்களில் காலதாமதமின்றித் துவக்குவதற்கு மேற்கொள்வார். ஆகவே, இது பற்றியுள்ள சிக்கல்கள் தீர்ந்துவிடும்.

ஏற்றத்தாழ்வுகள் நீங்க ஆவன செய்யப்படும்

வார்டு பிரிவினைகளைப் பற்றிச் சொன்னார்கள். பல்வேறு ஏற்றத் தாழ்வுகளை எடுத்துக்காட்டி மக்கள் தொகை அடிப்படையில் பிரிக்க வேண்டுமென்று அரசாங்கம் ஆணைகள் பிறப்பித்திருக்கிறது.

மக்கள் தொகைக்கு ஏற்ப வார்டுகளைப் பிரித்து அனுப்புகிறார்கள். நாங்கள் அதை, 'யூனியன் கவுன்சிலுக்குப் போய்வரட்டும்' என்று சொல்லியிருக்கிறோம். அதோடு பொதுமக்களுடைய பார்வைக்கும் அவை விடப்பட வேண்டுமென்று உத்தரவு இருக்கிறது.

எந்த எந்தக் குறைகள்—எந்த எந்த வார்டு எந்த எந்த முறையில் பிரிக்கப்படவேண்டும் என்பதைப் பற்றி எந்த சமூகத்தாரோ, எந்தக் கட்சியினரோ அல்லது தொடர்புடைய தனிப்பட்டவர்களோ எழுதி அனுப்பினால் அரசாங்கம் அவற்றைப் பரிசிலனை செய்து பார்த்து, நியாயமான முடிவினை எடுக்கும்.

(4-ம் பக்கம் பார்க்க)

ஊருக்கு உழைத்திடும் உணர்வு...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்னறச்குள்ள ஏற்றத்தாழ்வுகள் அகற்றப்படும்.

பரிசீலனை செய்வோம்—சீராகச் செப்பனிடுவோம்!

பஞ்சாயத்துக்களைப் பிரிப்பது பற்றியும் சொன்னார்கள். 'ரெவினியூ யூனிட்' என்று வைத்திருப்பதன் காரணமாக உள்ள சங்கடங்களை எடுத்துச் சொல்லி 'ஐந்தாயிரம் மக்கள் தொகை—பத்தாயிரம் வருமானம்' என்ற அடிப்படையில் மாற்றுகின்ற நிலைமையை எடுத்துச் சொன்னார்கள்.

இந்த அரசு, அந்தச் சங்கடங்களை எல்லாம் நல்ல முறையில் பரிசீலனை செய்து அவைகளைச் சீராகச் செப்பனிடும் காரியங்களைச் செய்யும்.

சட்டச் சங்கடங்கள் நிறைய இருக்கின்றன!

ஆண்டுக்கொரு முறை வரி வசூலிக்கின்ற உத்தரவைப் பிறப்பிப்பதாகச் சொன்னார்கள். அந்தச் சட்டம் கடந்தகால அரசாங்கத்தினுடைய செயலால் கொண்டு வரப்பட்டதாகும்.

இதை உடனடியாக நீக்க வேண்டுமென்று முயற்சித்தோம்; ஆனால் இதில் சட்டச் சிக்கல்கள் அதிகமாக இருப்பதால், அரசாங்கம் இதனைப் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. விரைவாக அரசாங்கம் இதைப் போக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

ஊழியர் ஏற்றம் பெற உறுதுணையாக இருப்போம்

மாநகராட்சி மன்றம், ஊராட்சி மன்றங்களில் பணியாற்றுகின்றவர்களைப்பற்றித் தனியாக இந்த அரசாங்கத்திற்கு ஆர்வம் இருக்கிறது என்பதைத் தெளிவுபடுத்திக்கொள்ள விரும்புகிறேன்.

அவர்களுக்கு நல்ல உயர் வாய்ப்புக்களை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் விரும்புகிறது. அவற்றை நல்ல முறையிலே சீர்படுத்தி செம்மைப்படுத்துவதற்கு அரசாங்கம் விரும்புகின்ற பொழுது, தேவையில்லாத பல துறைகள் அவற்றிலே இருப்பதாக—அந்தத் துறையிலே பணியாற்றுகின்றவர்களே சொன்னார்கள்.

ஒரு காசாக இருந்தாலும், அது பொதுமக்களிடமிருந்து வரியாகப் பெறப்படுகிறது. அதை நியாயமாகச் செலவிட வேண்டுமென்பதில் அனைவரும் அக்கறை செலுத்த வேண்டும்.

அப்படிப்பட்ட நிர்வாகச் சீர்திருத்தங்கள் செய்யப்படுகின்ற பொழுது அதனாலே பாதிக்கப்படக்கூடியவர்களுக்கு என்ன மாற்றுத் திட்டம் இருக்கிறது என்பதை அரசாங்கம் யோசித்துக்கொண்டிருக்கிறது.

நீண்ட நெடுங்காலமாகப் பணியாற்றிக்கொண்டிருக்கின்ற அந்தப் பணியாளர்களுக்கு ஓய்வு ஊதியங்கள் போன்ற ஊதியங்கள் கிடைக்கவில்லை; அரசு ஊழியர்களுக்குக் கிடைக்கக் கூடிய வசதிகள் அவர்களுக்குக் கிடைக்கவில்லை.

இந்தத் தன்மையை மாற்றுகின்ற முறையிலே அவர்களுக்கும் ஓய்வு ஊதியங்கள் கொடுக்கப்பட வேண்டும் என்பதை, கொள்கையளவிலே அரசு ஏற்றுக்கொள்ளுகிறது. அப்படிக் கொடுக்க வேண்டுமென்ற ஆசை.

கருணையுள்ள அரசாங்கம்—திடம் இருந்தாலும், கையிலே காசு இல்லாத காரணத்தினால் ஒன்றும் செய்ய முடியாத நிலைமை இப்பொழுது ஏற்பட்டுவிடுகிறது.

பணியாற்றுகின்ற ஊழியர்கள், 'நாட்டினுடைய பெரும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறோம்' என்ற உணர்ச்சியோடு இருக்கவேண்டும்.

பத்துப் பதினைந்து ஆண்டுகளாக ஊழியர்களாக இருந்தவர்கள் திடீரென்று நீக்கப்பட்டால் என்ன தொல்லைப்படுவார்கள் என்பதை நான் அறிவேன். அவர்களையெல்லாம் தெருவிலே நிற்கவைத்துப் பார்க்க வேண்டுமென்று நானோ அல்லது நான் சார்ந்திருக்கின்ற அரசாங்கமோ நினைக்காது!

அதிகாரிகள் போக்கில் மாற்றம் அவசியம்

ஒரு சில அதிகாரிகள், இன்னும் பழமைப் பாசத்திலே இருக்கலாம். அவர்கள் அதை விட்டுவிட வேண்டும். நான் இப்படிச் சொல்வதனாலே, அவர்கள் அந்தக் கட்சியிலிருந்தால் அதை விட்டுவிட்டு, இந்தக் கட்சிக்கு வந்துவிட வேண்டுமென்று சொல்வதாக எடுத்துக்கொள்ளக்கூடாது.

எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும்கூட, இனியாவது அவர்கள், கட்சி சார்பற்றவர்களாக—நடுநிலைமையாகச் செயல்படுவதற்கான மனப்பக்குவத்தைப் பெறுதல் வேண்டும்.

'அதிகாரிகள் எல்லாம் சரியில்லை' என்று சுட்டிக்காட்டுவது நல்லதல்ல. பொதுவாக நம்முடைய மாநிலத்திலே உள்ள அதிகாரிகள், செயல்திறம் மிக்கவர்கள்; மற்ற மாநிலத்தவர்கள் எல்லாம் நம் மாநிலத்து அதிகாரிகளை கடன் வாங்கக்கூடிய நிலைமை இருக்கிறது; ஆகவே நம் மாநிலத்து அதிகாரிகள் என்றாலே, 'திறம்படச் செயலாற்றுபவர்கள்' என்பது தெரியும்.

ஒரு சில அதிகாரிகள், முன்பு இருந்தவர்களுடைய விருப்பு வெறுப்புக்கு உட்பட்டு—அவர்களுடைய கட்டாயத்திற்கு ஆட்பட்டு—அடிமைப்பட வேண்டிய நிலைமையில் இருந்தாலும், அவர்கள் எல்லாம் சில காலங்களிலே நம்முடைய கருத்தை ஏற்றுக் கொள்ளலாம்.

ஆனால் அவர்கள் இன்றைக்கும் அதே நிலையில் இருக்கிறார்கள் என்று சொல்லிவிட முடியாது; இப்போது அவர்கள் உற்சாகத்தோடு பணியாற்றுகிறார்கள்.

மாமியார் வந்துவிட்டால் மனைவிக்குப் பொதுவாகவே கணவனிடத்தில் அச்சம் இருக்கும். மாமியார் வந்திருக்கின்ற நேரத்தில் கணவன் மனைவியை எப்படி அழைத்தாலும்–'வா, வா' என்று அழைத்தாலும் அவள் வரமாட்டாள்—அச்சம் காரணமாக! மாமியார் போனபிறகு மீண்டும் மனைவி கணவனிடத்தில் பேசச் சென்றால், கணவன், 'முன்பு நான் கூப்பிட்டபொழுது நீ வரவில்லையே; ஆகவே, இப்பொழுது என்னிடம் நீ பேசக்கூடாது' என்று சொன்னால் அந்தக் கணவனைப் பற்றி நாம் எப்படி நினைப்போமோ, அதைப் போல்தான், கடந்த 'காங்கிரசு சர்க்கார் மாமியார்' இருந்த பொழுது அதிகாரிகள் எல்லாம் நம்மிடத்திலே வரவேண்டுமென்று விரும்பியிருந்தாலும் கூட, வருவதற்கு முடியாது; அவர்களுடைய விருப்பத்திற்குத் தடை விதிக்கப்பட்ட நிலைமை இருந்தது.

ஆனால் இன்றைக்கு அவர்கள் நிலை அப்படியில்லை; ஆகவே அவர்களை இன்னமும் சந்தேகக் கண்கொண்டு பார்க்கக்கூடாது.

நாட்டின் பெரும் பகுதிப் பணிகளை செயல்படுத்துகின்ற பொறுப்பினை அதிகாரிகள்தான் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கின்ற பொறுப்பினை மனப்பூர்வமாகச் செய்து காட்டக்கூடிய முறையில் பணிகளை மேற்கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

அவர்களுக்கு எந்தவிதமான குறையும் இல்லாத மன உறுதியோடு அரசாங்கம் செயல்படும் என்பதையும் தெளிவாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

எந்த யோசனையையும் அரசு புறக்கணிக்காது

பொதுவாகவே உறுப்பினர்கள், அவரவர் தொகுதிகளைப் பற்றிய கருத்துக்களைச் சுட்டிக்காட்டினாலும், நான் அவற்றிற்கு விளக்கங்கள் சொல்லாமல் போனாலும் அவற்றை எண்ணிப் பார்க்கவில்லையென்றோ, அல்லது, அவற்றைப் புறக்கணித்துவிட்டேன் என்றோ யாரும் கருதத் தேவையில்லை. அவர்கள் தெரிவித்த யோசனைகள் அத்தனையையும் அரசாங்கம் ஏற்றுக்கொண்டு அவற்றை நிறைவேற்ற முயலும்."

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்பெற்றது

தீ விபத்து நிவாரணம்

எம். ஜி. ஆர். வசூலித்த மூன்றும் நாள் நிதி

சென்னை, ஜூலை 17—சென்னை நகரில், வட சென்னைப் பகுதியில் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். இன்று மூன்றுவது நாளாக நிதி திரட்டினார்.

முன் இரண்டு நாட்களைப் போலவே இன்றும்—பொது மக்களும் வியாபாரிகளும்—பணமாகவும், பொருள்களாகவும் நிதியாக வழங்கினர். ரூ. 12,149 வசூலாயிற்று.

இத்துடன் துணிகளும், மற்றும் தோற்பெட்டி—மரக் குதிரை—பேனா—சைக்கிள்—குடை—இரும்புப்பெட்டி போன்றவைகளும் நிதியாகக் கிடைக்கப் பெற்றன.

கடந்த மூன்று நாட்களிலும் மொத்தம் கிடைத்த நிதி ரூ. 37,811.98.

மூன்று நாட்களிலும் ஏறத்தாழ ரூ. 20 ஆயிரம் மதிப்புள்ள பொருள்களும் நிதியாகக் கிடைத்திருக்கிறது.

எம். ஜி. ஆர். அவர்கள் மேற்கொண்டிருந்த இந்த நிதி வசூலில், நிதியுதவியளித்த அனைவருக்கும், உடனிருந்து பணி பாற்றிய கழகத் தோழர்கள்—ஆதரவாளர்கள்—மற்றும் அமைதியை நிலைநாட்டிய காவல்துறையினர் ஆகியோருக்கும் நீலநாராயணன் நன்றி தெரிவித்துக் கொள்கிறார்.

நகராட்சிகள் திருத்த மசோதா

ஒருமனதாக நிறைவேறியது

சென்னை, ஜூலை 17—காங்கிரசு ஆட்சியினரால் கலைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட நெல்லை, அருப்புக்கோட்டை நகராட்சிகள் மீண்டும் புத்துயிர் பெற்று இயங்குவதற்கான சட்டம் தமிழக சட்டமன்றத்தில் நிறைவேறியது.

புதுத் தேர்தல் நடத்தாமலே, கலைக்கப்பட்ட நகராட்சிகளை மீண்டும் இயங்கச் செய்ய அரசுக்கு இத்திருத்த மசோதா அதிகாரம் அளிக்கிறது.

நகராட்சிகளைக் கலைப்பதற்கு முன், தொடர்புடைய நகராட்சிகள் தங்களுடைய நிலைமையை விளக்க அவகாசம் கொடுப்பதற்கு வகை செய்யும் திருத்தம் கொண்டுவரப்பட்டது.

இந்தத்திருத்தத்துடன் கொண்டு வரப்பட்ட மசோதா சட்டமன்றத்தில் ஒருமனதாக நிறைவேறியது.

இம்மசோதாவைப் பற்றி சட்ட அமைச்சர் மாதவன் பேசுகையில் கூறியதாவது :—

"இந்தத் திருத்த மசோதா மேலவையில் நிறைவேற்றப்பட்டது. எதிர்க் கட்சிக்கு மதிப்பு தரும் வகையில் மேலவையில் காங்கிரசுப் பெரும்பான்மையுடன் கொண்டுவரப்பட்ட இத்திருத்தத்துடன் கூடிய மசோதாவை ஏற்றுக்கொள்கிறேன்."

நிலச் சீர்திருத்தச் சட்டம்

விவசாயிகளுக்கு பாதுகாப்பு அளிக்க எல்லா வகையிலும் அரசாங்கம் முயற்சிக்கும்

அமைச்சர் கே. ஏ. மதியழகன் விளக்கம்

சென்னை, ஜூலை 17—சட்டமன்றத்தில், சாகுபடியாளர்கள், குடியிருப்புக்களிலிருந்து வெளியேற்றப்படுவதினின்று பாதுகாப்பு அளிப்பது பற்றிய திருத்த மசோதாவை கொண்டுவந்து அமைச்சர் கே. ஏ. மதியழகன் கூறியதாவது :—

"நில உடமை உச்சவரம்புச் சட்டத்தில் உள்ள கோளாறுகள் என்ன என்பதைப் பார்க்க அரசுக்கு அவகாசம் வேண்டும்.

"நில உடமை உச்சவரம்புச் சட்டத்தின் பேரால், மிச்ச வரம்புச் சட்டம் கொண்டு வந்ததால் ஏற்பட்ட பாதகங்கள் என்ன என்பதையும், நில வரம்புச் சட்டம் ஏன் தோல்வியடைந்து விட்டது என்பதையும் ஆராயாமல், அவசரம் அவசரமாக—'விவசாயிகளுக்கு நன்மை செய்ய வேண்டும்' என்ற எண்ணத்தில் ஏதாவது செய்தால், எல்லாம் கெட்டுவிடும்.

"ஆகவே, இதுபற்றி அரசு தீவிரமாக யோசித்துக்கொண்டிருக்கிறது; நன்கு பரிசீலித்த பின், விரிவான நிலச் சீர்திருத்த சட்டம் கொண்டுவரப்படும்.

"குடியிருப்பு அனுபோகங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் சட்டம் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அமுல் நடத்தப்படவில்லை. இத்துறையில் முந்திய அரசு அக்கறை காட்டவில்லை. இந்தச் சட்டத்தைச் சரியாக அமுலாக்கவும், இதனால் விவசாயத் தொழிலாளர்களுக்கு என்ன பாதுகாப்பு ஏற்பட வேண்டும் என்று சட்டத்தில் கண்டுள்ளதோ அந்தப் பாதுகாப்பு ஏற்படவும் இந்த அரசு எல்லாவகையிலும் முயற்சிக்கும்."

காங்கிரசு உறுப்பினர் மீதான உரிமைப் பிரச்சினை

உரிமைக் குழு முடிவு

சென்னை, ஜூலை 17—காங்கிரசு உறுப்பினர் திரு. சிதம்பரநாத நாடார் அவர்கள், சட்டமன்றப் பேரவைத் தலைவர் மீது ஒருதலைக் குற்றம்சாட்டி, அவையின் உரிமையை மீறியதாக ஏற்பட்ட பிரச்சினை குறித்த உரிமைக் குழுவின் தீர்ப்பினை, சட்டமன்ற அரசுக் கட்சித் தலைவர் இரா. நெடுஞ்செழியன் சட்டமன்றத்தில் இன்று கூறினார்; தீர்ப்பின் விவரம் வருமாறு :—

"திரு. சிதம்பரநாத நாடார் வருத்தம் தெரிவித்திருப்பதை ஏற்றுக்கொண்டு இதை இத்துடன் விட்டுவிடலாம் என்று உரிமைக் குழு தீர்மானித்துள்ளது."

சென்னைச் சிறைச்சாலை இடம் மாறுமா?

சென்னை, ஜூலை 17—"சென்னை மத்திய சிறைச்சாலையை நகருக்கு வெளியே செங்குன்றத்திற்கு மாற்றும் திட்டத்தைச் செயல்படுத்த ரூ. 1 கோடிக்குமேல் செலவாகும் என்பதால், நிதி நெருக்கடி நிலையை முன்னிட்டு, தற்போது அத்திட்டம் ஒத்திப்போடப்பட்டுள்ளது"

என்று, சட்டமன்றத்தில் அமைச்சர் செ. மாதவன், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

சென்னை மாநகராட்சி திருத்த மசோதா

சட்டமன்றத்தில் நிறைவேறியது

சென்னை, ஜூலை 17—சென்னை நகரில் உள்ள 100 வட்டங்களை 120 ஆக உயர்த்தவும், சட்டமன்றத் தொகுதிகளை 10-லிருந்து 12 ஆக உயர்த்தவும், வகை செய்யும் சென்னை மாநகராட்சி திருத்த மசோதா சட்டமன்றத்தில் நிறைவேறியது.

"தொகுதி நிர்ணயக் குழு முடிவுப்படி இவ்வாறு திருத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டது; இதையொட்டி வாக்காளர் எண்ணிக்கை சீரமைக்கப்படும்" என்று உள்ளாட்சித் துறை அமைச்சர் மா. முத்துச்சாமி கூறினார்.

கைதிகட்கு அளிக்கப்படும் உணவு

அமைச்சர் விளக்கம்

சென்னை, ஜூலை 17—"சிறைச்சாலைகளில் கைதிகட்கு நல்ல முறையிலேயே உணவு அளிக்கப்பட்டுவருகிறது; உடல் நலத்தைப் பாதிக்காத வகையில் நல்ல உணவுப் பொருள்களே கொடுக்கப்படுகின்றன; கீரை, உருளைக் கிழங்கு, தக்காளி முதலிய சத்துள்ள பொருட்கள் அடங்கிய உணவு அளிக்கப்பட்டுவருகிறது"

என்று அமைச்சர் செ. மாதவன், சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில், "முந்திய ஆட்சியில் எப்படி இருந்தபோதிலும், இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு கைதிகட்கு வழங்கப்படும் உணவில் குறை சொல்ல முடியாது" என்றார் அமைச்சர்.

கறவை மாடுகள் வாங்கக் காங்கிரசார் பெற்ற பணம்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

பூவிருந்தவல்லி பஞ்சாயத்து யூனியன் தலைவர்; காதர் என்பவர் திருப்பெரும்புதூர் பஞ்சாயத்து யூனியன் தலைவர்; இருவரும் காங்கிரசுக்காரர்கள் என்பதால், அப்போதிருந்த அரசு இவ்விதம் பாகுபாடு காட்டியிருக்கலாம். இந்த அரசு எந்த விதத் தயக்கமும் காட்டாது."

கே. விநாயகம் :—"பணம் பெற்றவர்கள், தரமான மாடு கிடைக்காததால் இன்னும் வாங்கவில்லை என்பதும், தரமான மாட்டுக்காக இன்னும் தேடி அலைந்து கொண்டிருக்கிறார்கள் என்பதும் அரசுக்குத் தெரியுமா ?"

அமைச்சர் :—"அவர்கள் கனம் விநாயகத்தை அழைத்துக் கொண்டு சென்று இப்படிச் சொல்லி ஏமாற்றியிருக்கிறார்கள் போலும் !"

வி. கே. கோதண்டராமன் :—"இந்தக் கடன் தொகைகள், தேர்தலுக்குச் சில மாதங்களுக்கு முன்னால் வழங்கப்பட்டிருப்பதால், தேர்தலில் தங்களுக்குச் சாதகமாக இருக்கச் செய்யவும், ஆட்களைத் 'தாஜா' செய்யவும்தான் இந்தப் பணம் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பது உண்மையா ?"

பதில் :—"அது, திருப்பெரும்புதூர் தொகுதியாக இருப்பதால், கனம் உறுப்பினர் சொல்லுவதும் உண்மையாக இருக்கலாம்."